# திருவத்திபுரம் நகராட்சி
# நிர்வாக அறிக்கை
# 2020–2021

# திருவத்திபுரம் நகராட்சி
## நிர்வாக அறிக்கை – 2020–2021

திருவத்திபுரம் நகராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து 30.03.1978ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசாணை எண்.506 உத்திரவின்படி 1.4.1978ம் தேதி முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு பின்னர் அரசாணை எண்.85 நாள். 22.5.1998 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களது ஆணைப்படி 'இரரண்டாம் நிலை ' நகராட்சியாக உயர்த்தப்பட்டு 22.05.1998 முதல் செயல்பட்டு வருகிறது.

**1. அமைப்பும் மேலாண்மையும்.**

| | | |
|---|---|---|
| 1. நகரத்தின் பரப்பளவு | ... | 10.76 சதுர கிலோ மீட்டர். |
| 2. மக்கள் தொகை | ... | 2011 ம் ஆண்டின்கணக்கெடுப் பின்படி மக்கள்தொகை 37,771<br>இதில் ஆண்கள் 18,766<br>பெண்கள் 19005 ஆகும்.<br><br>2001 ம் ஆண்டின்கணக்கெடுப் பின்படி மக்கள்தொகை 35,201<br>இதில் ஆண்கள் 17,497<br>பெண்கள் 17,704 ஆகும். |
| 3. நகரமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | ... | நகரமன்ற தலைவர் மற்றும் 27 நகரமன்ற உறுப்பினர்கள், |
| 4. நகராட்சியின் நிலை | ... | இரண்டாம் நிலை நகராட்சி. |
| 5. நகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ள வருவாய் கிராமங்கள். | ... | 1. திருவத்துார் . 2.பரிதிபுரம்.<br>3. கொடநகர். |

இந்நகர மன்றத்திற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.135 நாள்:17.06.1996ம் தேதியிட்ட உத்திரவின்படி அங்கீகரிக்கப்பட்ட வார்டுகளின் எண்ணிக்கை 27 ஆகும். இநகரமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 27. மேற்படி உறுப்பினர்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்களுக்காக ஒதுக்கப்பட்ட வார்டுகளின் எண்.4, 12 மற்றும் 23 (பெண்) ஆகும். வார்டு எண்.1, 5, 6, 8, 11, 15, 24 மற்றும் 27 ஆகியவை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்தும், பொது பிரிவிற்கென வார்டு எண்.2, 3,6,9,10,13,14,16,17,18,19, 20, 21, 22, 25 மற்றும் 26 ஆகிய 16 வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது 26.09.2016 முதல் உள்ளாட்சி தேதி ஒத்தி வைக்கப்பட்டு, தனி அலுவலருக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு நிர்வாகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அறிக்கையாண்டில் 1.4.2020 முதல் 03.07.2020 முடிய கீழ் குறிப்பிட்டவர்கள் நகராட்சி ஆணையர்களாக (பொ) பணிபுரிந்து வந்துள்ளனர்.**

1. திரு. ஆர்.எட்வின்பிரைட்ஜோஸ் –
   நகராட்சி பொறியாளர் (ம) ஆணையாளர் பொறுப்பு
   6.12.2019 முதல் 01.06.2020 வரை.

2. திரு.எஸ்.பாலசுப்ரமணியன்,
   துப்புரவு அலுவலர் (ம) ஆணையாளர் பொறுப்பு–
   02.06.2020 முதல் இதுநாள் வரையில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

2) தேர்தல்.– 26.09.2016 முதல் உள்ளாட்சி தேதி ஒத்தி வைக்கப்பட்டு, தனி அலுவலருக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு நிர்வாகம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3) தனி அலுவலர் 26.09.2016 – இது நாள் வரையில்

இந்நகரமன்றத்தின் நடவடிக்கைகளை 26.09.2016 முதல் உள்ளாட்சி தேதி ஒத்தி வைக்கப்பட்டு, தனி அலுவலருக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது. இயல்பாக மன்றத்தின் கூட்டங்கள் பிரதி மாதம் சாதாரண கூட்டமும், தேவைக்கேற்ப அவசர கூட்டங்களும் நடைபெற்றன.

அறிக்கையாண்டில் மொத்தம் 3 . சாதாரணக் கூட்டங்கள் நடைபெற்றன. நடைபெற்றுள்ளது. மன்றத்தில் வைக்கப்பட்ட பொருள்கள் அவ்வப்போது துரிதமாக முடிவு செய்யப்பட்டு வந்தது. அறிக்கையாண்டில் மன்றக்கூட்டத்தில் வைக்கப்பட்ட பொருட்களும் அனைத்தும் முடிவு செய்யப்பட்டன.

### 5. குழுக்கள்,

அறிக்கையாண்டில் மூன்று குழுக்கள் செயல்பட்டு வந்தன. அவை 1. நியமனகுழு, 2. ஒப்பந்தக்குழு, 3. மேல்முறையீட்டுக்குழு, ஆகியவை நகரமன்றத்தால் துவக்கப்பட்டு செயல்பட்டு வரும். தற்பொழுது தனி அலுவலருக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறது.

#### 1. நியமனக் குழு.

இக்குழுவில் நகரமன்ற உறுப்பினர் ஒருவரும் நகரமன்ற தலைவரும் மற்றும் நகராட்சிஆணையர் அவர்களும் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். புதிய நியமணங்கள் அனைத்தும் இக்குழு அங்கீகரித்த பின்னரே பணி நியமண உத்திரவு வழங்கப்படுகிறது. அறிக்கை ஆண்டில் புதிய நியமனங்கள் ஏதுமில்லை.

#### 2. ஒப்பந்தக் குழு.

இக்குழுவில் நகரமன்ற உறுப்பினர் ஒருவரும் நகரமன்ற தலைவர் மற்றும் ஆணையர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர், அறிக்கை ஆண்டில் இக்குழு இரண்டு முறைகூட கூட்டப்படவேண்டும்.

#### 3. மேல் முறையீட்டுக் குழு.

இக்குழுவில் 4 நகரமன்ற உறுப்பினர்களும் நகரமன்ற தலைவர், நகராட்சி ஆணையர், ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். சொத்துவரி சம்மந்தமாக மேல் முறையீடு மனுக்களை ஆய்வு செய்து வரி குறைப்பு நடவடிக்கைகளை இக்குழு செய்து வரும். அறிக்கை ஆண்டில் இக்குழு ஒருமுறைகூட கூட்டப்படவில்லை.

## 6. மேலாளுகை.

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவர் மேலாளராக பணியாற்றி வந்துள்ளா

1. திருமதி . சி.அம்பிகா. மேலாளர் 29 .4.2018 முதல் 19.3.2020

2. திரு.கே.முருகன், கணக்கர் (மற்றும்) மேலாளர் பொறுப்பு., 20.03.2020 முதல் இன்றைய தேதி வரை

நகராட்சி அலுவலகம் தன்னுடைய சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அலுவலக இடவசதி போதுமானதாக உள்ளது. அறிக்கை ஆண்டில் திருமதி. உஷாராணி நகராட்சி பொறியாளராக கூடுதல் பொறுப்பில் பணியாற்றி வந்துள்ளார்.

பொதுப்பணி மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு மற்றும் பராமரிப்பு பணிகளை நகராட்சி பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

நகரமைப்பு பணிகளை கவனித்து வர ஒரு நகரமைப்பு ஆய்வர் பணிபுரிந்து வருகின்றார். அறிக்கை ஆண்டில் திரு.நடராஜன் அவர்கள் நகரமைப்பு ஆய்வாளர் கூடுதல் பொறுப்பில் பணியாற்றி வந்துள்ளார்.

## 7. சாலைகளும், பாலங்களும்.

இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளும் அவற்றின் நீளமும் பின்வருமாறு.—

| | | | |
|---|---|---|---|
| 1. திருவத்திபுரம் | – ஆரணி சாலை | . | |
| 2. திருவத்திபுரம் | – காஞ்சீபுரம் சாலை | = | 4.100 கி.மீ |
| 3. ஆற்காடு | – திண்டிவனம் சாலை | = | 5.800 கி.மீ |

அறிக்கைகயாண்டில் இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வந்த சாலைகளின் மொத்த நீளம் 50.366 கி.மீ. அதில் ஒவ்வொரு இனத்திற்கான நீளங்களின் விவரம் வருமாறு:—

| | 31.3.2010 உள்ள நீளம் |
|---|---|
| 1. தார்சாலை, | 34.682 கி.மீ. |
| 2. சிமெண்ட் சாலை, | 9.852 கி.மீ. |
| 3. ஜல்லி ரோடு, | 6.384 கி.மீ. |
| 4. கிராவல் ரோடு, | 6.384 கி.மீ |
| | 57.302 கி.மீ |

அறிக்கையாண்டில் எல்லா சாலைகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

## 8. குத்தகைகள்

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை, இருசக்கர வாகன நிறுத்துமிடம், ஆடு அறுக்கும் தொட்டி முதலியவைகளை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்பட்டது மற்றும் துறை மூலம் வசூல் செய்யப்பட்டது. இவைகள் மூலம் வரவு ரூ.19.00இலட்சம் ஆகும் . இதில் சென்ற ஆண்டு வரவு ரூ.21.00 இலட்சம் ஆகும்.

## 9. விடுதிகள்

இந்நகராட்சியில் பயணியர் விடுதி மற்றும் தங்கும் விடுதிகள் ஏதும் பராமரிக்கப்ப டவில்லை. பொதுப்பணித் துறையினரால் ஒரு பயணியர் விடுதியும் நெடுஞ்சாலைத் துறையினரால் ஒரு பயணியர் விடுதியும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 10. கருவிகள், தளவாடங்கள்

இந்நகராட்சிக்கு சொந்தமான சாலை உருளைகள் ஏதும் பராமரிப்பில் இல்லை. பொது சுகாதாரப் பணிகளை கவனிக்க நான்கு பொது சுமை ஊர்திகளும் குடிநீர் விநியோகப் பிரிவில் இரண்டு இழுவை வண்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. ஆணையாளர் தன்னுடைய புறப்பணிகளை கவனிக்க ஒரு ஈப்பு வண்டி மட்டும் பயன்படுத்தி வருகிறார்.

## 11. விளக்கு வசதிகள்

அறிக்கையாண்டில் மொத்தம் உள்ள 2284 தெருவிளக்குகளில் 2169 விளக்குகள் நல்லமுறையில் எரியவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தன. அவை பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. 40 வாட்ஸ் குழல்விளக்குகள் | 1480 |
| 2. 250 வாட்ஸ் சிளப்எல் விளக்குகள் | 480 |
| 3. எல்.இ.டி. | 81 |
| 4. உயர் கோபுர மின் விளக்குகள் | 6 |
| 5.காம்பேக் மின் விளக்குகள | 237 |
| | ---- |
| மொத்தம் | 2284 |

இவ்வினத்தின் கீழ் அறிக்கையாண்டில் மொத்த செலவு ரூ.9,32,823/– ஆகும். சென்ற ஆண்டு செலவு ரூ.9,00,000/-

## 12.கல்வி

1.4.1990 முதல் பள்ளிகள் அனைத்தும் கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வருவதால், ஆசிரியர்கள் மற்ற சிப்பந்திகளுக்கு சம்பளம் உதவி கல்வி அலுவலர், செய்யாறு அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. அரசின் ஆணைப்படி கட்டிட பராமரிப்பு, உள்கட்டமைப்பு வசதிகள் நகராட்சியால் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சி பராமரிப்பில் மொத்தம் 11 ஆரம்பப் பள்ளி கட்டிடங்கள் உள்ளன. அறிக்கையாண்டில் பராமரிப்பு செலவினமாக ரூ. 22.75 இலட்சம் செலவில் கூடுதல் கட்டட்க்ள மறறும் பராமரிப்பு பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 13. இடைநிலைக்கல்வி:

இந்நகராட்சி எல்லைக்குள் ஒரு உயர்நிலைப்பள்ளியும், இரண்டு மேல்நிலைப்பள்ளிகளும் நடத்தப்பட்டு வந்தன. இதன் பராமரிப்பு முழுவதும் அரசினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சியில் எவ்விதமான உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளும் பராமரிக்கவில்லை.

## 14. மருத்துவ நிறுவனங்கள்

இந்நகராட்சியில் மருத்துவ நிலையங்கள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## 15. மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல நிறுவனங்கள்–

மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மகப்பேறு உதவியாளர் ஒருவர் மட்டும் பணிபுரிந்து வருகிறார். 2020–2021 ஆம் ஆண்டில் 152 மகப்பேறுகள் கவனிக்கப்பட்டன. அந்தந்தப் பகுதியில் பார்த்த பிரசவம் 152 ம், பிரசவத்திற்கு பிந்திய பராமரிப்பு பேர்களும் கவனிக்கப்பட்டது. ஆயா பணியிடம் 2.11.2009 ல் பூர்த்தி செய்யப்பட்டது..

## 16. நூல் நிலையம்–

பொது நூல் நிலையம் ஒன்று அரசினரால் நடத்தப்பட்டு வருகிறது. இந்நூல் நிலைய பராமரிப்பிற்காக நடப்பாண்டில் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் சொத்துவரியிலிருந்து ரு.100.00 க்கு 0.10 காசு வீதம் 2020–2021ல் ஆண்டுக்கு மொத்தம் ரூ.7.34 இலட்சம்/ – மாவட்ட நூலக அலுவலர், திருவண்ணாமலை அவர்களுக்கு செலுத்தப்பட்டது. நிலுவை ஏதும் இல்லை.

## 17. வானொலி.

இந்நகராட்சியால் வானொலி ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## 18. தொலைக்காட்சி அறை

ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## 19. பொது கழிப்பிடங்கள்.

அறிக்கையாண்டில் இந்நகரில் பொது கழிப்பிடங்கள் 19 ம் மூடிய மல அறைகள் ஐந்தும் பொதுமக்கள் உபயோகத்திற்காக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

## ஒருங்கிணைந்த துப்புரவு பாதுகாப்புதிட்டம் (I.S.P)

இத்திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பகுதிகளில் குளியல் அறைகள், கழிப்பிட அறைகள், துணிகளை துவைத்தல், குழந்தைகளுக்கான சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் கர்ப்பிணிகள் மற்றும் முதியோர்களுக்கான அமர்ந்த நிலையிலான யுரோபியன் அமைப்பு கழிப்பிட வசதிகள் கட்டிமுடிக்கப்பட்டு துப்புரவு பணியாளர்கள் மூலம் பொதுமக்கள் உபயோகத்திற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் பெரிதும் பயன் அடைந்து வருகின்றனர்.

## 20 தூய்மை பணி

அன்றாடம் நகரில் சேரும் குப்பைகளை தூய்மை பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்படுத்தியும் குப்பைகளை எடுத்துச்செல்ல 3 லாரிகள், டாடா ஏ.சி. –3 எண்ணிக்கை, மற்றும் பேட்டரி வண்டி – 20 எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது, தினசரி சேகரிக்கும் குப்பைகளை முறையே தரம் பிரித்து அதனை உரம் தயாரித்தல் பணி மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3 நுண்ணுரம் மையங்களில் (கொடநகர்,

கன்னியம் நகர் மற்றும் ஆற்றங்கரைத் தெரு) மக்கும் குப்பைகளை இயற்கை முறையில் உரம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 21. குடிநீர் வழங்கும் திட்டம்.

இந்நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு அரசாணை எண்.13 நாள்.27.01.2014ல் ரூ.1343.51 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டத்தின் (UIDSSMT) கீழ் பெறப்பட்டு பணிகள் முடிவுற்று இத்திட்டத்தின் பணிகள் முழுவதுமாக நிறைவு செய்யப்பட்டு 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தற்போது இந்நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு தேவைக்கான மொத்த குடிநீரும் செய்யாறு ஆற்று படுகையில் உள்ள 5 நீர் உறிஞ்சி கிணறுகள் மற்றும் 2 ஆழ்துளை கிணறுகளிலிருந்தும் பெறப்படுகிறது. மேற்படி கிணறுகள் மூலம் நாள் ஒன்றிற்கு 2.88 MLD அளவு குடிநீர் பெறப்பட்டு, 9 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு மூன்று நாட்களுக்கு ஒரு மணி நேரம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் நபர் ஒருவருக்கு 68 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் 5.00 கி.மீ. நீள நீர் உந்து பிரதான குழாய்கள் மற்றும் 46 கி.மீ. பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதிய குடிநீர் இணைப்பு பெற விண்ணப்பித்திருப்பவர்களிடமிருந்து ரூ.5000 /– வீட்டுக்குடிநீர் இணைப்புக்கும், குடியிருப்பு அல்லாத பயன்பாடுகளுக்கு ரூ.10000 மும், வணிக நோக்கத்திற்காக வழங்கும் இணைப்புகளுக்கு ரூ.15,000 ம் வைப்புத் தொகையாக பெறப்பட்டு குழாய் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இப்புதிய குடிநீர் திட்டம் நகராட்சியின் கட்டுப்பாட்டிற்கு 16.9.2002–ம் தேதியிலிருந்து தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், வேலுார் அவர்களிடமிருந்து மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.. புதிய குழாய் இணைப்பு பெற்றவர்களிடமிருந்து குடிநீர் வரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.50 / – ரூ. 100 / – (ம) ரூ.150 / – வீதம் வசூலிக்கப்படுகிறது. இந்நகராட்சி பகுதியில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் 4610 ம், பொதுக்குழாய்கள் 220 ம், ஆழ்துளை கிணறுகள் 143 ம் சிறுமின்விசைப்பம்புகள் 21 ம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

புதிய குடிநீர் திட்டத்தின்மூலம் இணைப்பு பெற்றவர்களிடமிருந்து குடிநீர் வரியாக மாதம் ஒன்றுக்கு பின்வரும் முறைகளில் வசூலிக்கப்படுகிறது.

| பயன்பாடு | பழைய விகிதம் | புதிய விகிதம் | டெபாசிட் |
|---|---|---|---|
| 1. வீட்டு உபயோகத்துக்கு மாதம் ஒன்றுக்கு | 40.00 | 50.00 | 5000 |
| 2. வீட்டு உபயோகமல்லாத வகைக்கு | 80.00 | 100.00 | 10000 |
| 3. வியாபாரம், தொழில் நிறுவனத்திற்கு | 120.00 | 150.00 | 15000 |

புதியதாக நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு அதன் மூலம் பிரதான குழாய் அமைத்து நகரின் பல பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய தமிழ்நாடு அரசு சுதந்திர தின பொன்விழா திட்டத்தின்கீழ் உறட்கோ நிறுவனத்திடமிருந்து 70 சதவிகிதம் கடன் தொகையாகவும், 30 சதவிகிதம் மான்யமாகவும் வழங்கி உத்திரவிடப்பட்டதன் அடிப்படையில், இச்செலவினை சமாளிக்கவும் கடனை திருப்பி செலுத்திடவும் ஏதுவாக குடிநீர்குழாய் வைத்திருப்பவர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு மேற்படி புதிய குடிநீர் கட்டணம் உயர்வு செய்து அமுல்படுத்திட திருவத்திபுரம் நகரமன்ற தீர்மான எண்:236 நாள்:17.03.2008ல் அங்கீகாரம்

அளித்துள்ளது. மேற்படி நகரமன்ற ஒப்புதலின்படி புதிய குடிநீர் குழாய் திட்டத்தின்படி கட்டணம் உயர்வு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

## 22. பொது சுகாதாரம்

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் சுகாதார அலுவலர் ஒருவரும், சுகாதார ஆய்வாளர் ஒருவரும் இவர்களுக்கு கீழ், களப்பணி உதவியாளர் ஒருவரும் மற்றும் இரண்டு துப்புரவு மேற்பார்வையாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். நகரில் தினந்தோறும் துாய்மை பணிகளை கவனிக்க இரண்டு துாய்மை மேற்பார்வையாளர்களின் கீழ் 36 துாய்மை பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 23 துாய்மை பணியாளர் பணிடங்கள் காலியாக உள்ளது. மேலும், நகரில் சேகரமாகும் திடக்கழிவுகளை உடனுக்குடன் அகற்றிட போதிய துாய்மை இல்லாமையால் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்:101 நாள்: 30.04.1997 ன் படி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:29828/2018/J3 நாள்:07.08.2019ன் ஒப்புதலின் படி தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 85 நபர்களை துாய்மை பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

தமிழக அரசின் சிறப்பு போலியோ ஒழிப்பு திட்ட நாளான 19.1..2020 மற்றும் 7.2.2020 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நகரில் அனைத்து பதிகளிலும் நகராட்சி பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது. மேற்படி நாட்களில் 1 முதல் 5 வயது வரையுள்ள 7420 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகள் போடப்பட்டது.

அறிக்கையாண்டில் காலரா, பிளேக் மற்றும் பெரியம்மை போன்ற நோய்கள் மூலம் இறப்பு இல்லை. அறிக்கையாண்டில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பெருமளவில் பாதிப்புக்குள்ளாகி வருகிறது .இதனை கட்டுப்படுத்த அரசின் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலின் படி தனிநபர்கள் சமூக இடைவெளி கடைபிடிக்கவும், முகக்கவசம் அணியவும் பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதுடன், நோய் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களை தனிமைப்படுத்தப்பட்டும், அப்பகுதியினை தடை செய்யப்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்டு அப்பகுதியினை கிரிமி நாசினிகள் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசுக்கடியால் டெங்கு நோய் பரவாமல் இருக்கும் பொருட்டு டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் கூடுதலாக 40 பணியாளர்களை கொண்டு நோய் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள் ஏற்படுத்தப்படுகிறது.

## 23 உரிமையாணைகள்

அறிக்கையாண்டில் அபாயகரமானதும் அறுவருக்கத்தக்கதுமான வியபாரங்களுக்கு தகுதியுள்ள அனைத்து வியாபாரங்களுக்கும் உரிமையாணை வழங்கப்பட்டது. இது சம்மந்தமான விதிகள் முறையாக கடைபிடிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் இவ்வினத்தின் கீழ் வழங்கிய உரிமையாணைகள் 600 ஆகும். இவ்வினத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 1,72,000 / – ஆகும்.

## 24 திருவிழாக்கள்

அறிக்கையாண்டில் இந்நகரில் அருள்மிகு வேதபுரிஸ்வரர் பாலகுஜாம்பிகை மற்றும் பார்வதி உடனாய பட்சீஸ்வரர் ஆலயத் திருவிழா 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. அச்சமயம் பொதுமக்களுக்கு குடிநீர் பணி மற்றும் துப்புரவு பணிகள் சிறப்பாக செய்து தரப்பட்டது.

## 25 சிறுசேமிப்பு திட்டம்

இந்நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

## 26. குழந்தைகள் சத்துணவு திட்டம்

இந்நகராட்சியின் பராமரிப்பில் செயல்பட்டுவந்த குழந்தைகள் சத்துணவு திட்டம் மொத்தம் 19 மையங்களில் அமைப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் சமையலர்கள் என சத்துணவு பணியாளர்களம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (I.C.D.S) என்ற அமைப்பின்கீழ் நகராட்சி கட்டுப்பாட்டிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு ஒருங்கிணைக் கப்பட்டுள்ளது.

## 27. பள்ளி சத்துணவு திட்டம்

இந்நகராட்சியில் 5 முதல் 9 வயது வரையிலான பள்ளி குழந்தைகளுக்கு ஒன்பது மையங்கள் மற்றும் 10 முதல்14 வயது குழந்தைகளுக்கு ஒரு மையமும் ஆக மொத்தம் 10 மையங்கள் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் அமைப்பாளர்கள் 7 சமையலர் 9 மற்றும் 3 உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்கண்ட 10 பள்ளிகளிலும் வேலை நாட்களில் 1221, விடுமுறை நாட்களில் 230 மாணவர்களுக்கு மதிய உணவு தயார் செய்ய தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் வகைகள் ஆகியவை மாவட்ட உணவு வழங்கல் துறை அலுவலரால் வழங்கப்பட்டு வருகிறது. தினசரி காய்கறி, விறகு முதலியவைகளுக்கு சிலலறை செலவினமாக மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதந்தோறும் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் சம்மந்தமான செலவினங்களுக்கான மானயத்தொகை மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களிடமிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

## 28. கணிப்பொறி ( Computer )

இந்நகராட்சி சம்மந்தப்பட்ட பதிவுகள் அனைத்தும் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு அனைத்து விவரங்களும் தயார் நிலையில் உள்ளது. அதுபோல நகராட்சி கணக்குகளான வருவாய்நிதி, கல்விநிதி மற்றும் குடிநீர் (ம) வடிகால்வாய் நிதி கணக்குகள் தயாரிக்க தேவையான தினசரி வரவினங்கள் மற்றும் செலவினங்களுக்கான பட்டியல்கள் 2020–2021ம் ஆண்டுகளுக்கு பதிவு செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகளை கணினி உதவிதிட்ட அமைப்பாளரைக் கொண்டு கணிப்பொறி சம்மந்தமான விளக்கங்கள் நேரில் சரிசெய்யப்பட்டு வருகிறது.

மேலும் தற்போது நகராட்சியில் வரிவசூலில் ரசீதுகள் வரித்தண்டலர்களைக் கொண்டு தயார் செய்யாமல் நேராகவே வரிவிதிப்பாளர்களால் நகராட்சியில் கணிப்பொறியின் மூலமாகவே வரிவசூல் செய்து உடனுக்குடன் ரசீதுகள் வழங்கப்பட்டு வருகிறது. சொத்துவரி, குடிநீர்வரி மற்றும் தொழில்வரி வசூலிக்கப்பட்டு கணிப்பொறியின் மூலமே ரசீதுகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பலவகைப்பட்ட வரவினங்களுக்கென புதிய மென்பொருள் கணிப்பொறியில் பதியப்பட்டு அதன்மூலம் அனைத்து வரவினங்களும் காசாளர் மூலம் வசூலிக்கப்படுகிறது.

மாதாந்திர அறிக்கைகள் நகராட்சியின் விவரங்கள் அனைத்தும் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் மாதாந்திர அறிக்கைகள் பிரதிமாதமும் இதிலிருந்து எடுத்து நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பப்படுகிறது. இதேபோன்று மாவட்ட ஆட்சித்தலைவர் சம்மந்தப்பட்ட அறிக்கைகளும் பிறதுறைகளுக்கும் தபால்களுக்கான பதில்கள் அனைத்தும் கணிப்பொறியின் (E.Mail) மூலமாகவே அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

## 29 இணையதளம் (internet) : –

இந்நகராட்சியில் இணையதளம் (internet) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் நகராட்சியின் தலைமை அலுவலகங்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்தும் தகவல்கள் பெறப்பட்டு உடனுக்குடன் அறிக்கைகள் அனுப்பப்படுகிறது.

## 30) நகரமைப்பு பிரிவு

புதிய கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி பெறப்படும் வரைபட மனுக்கள் பற்றிய விவரங்கள் அனைத்தும் கணிப்பொறியில் பதிவு செய்த பின்னரே இதற்கென தயார் செய்யப்பட்ட ஸ்மாட் டி.சி.ஆர். மென்பொருளின் ஒப்புதலின் படியே கட்டிட அனுமதி வழங்கப்படுகிறது.

## 31) பொது,

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் வாராந்திர மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் அணைத்தும் **இ**மெயில் மூலமாக தெரிவிக்கப்பட்டு வருகிறது.

## 32) திட்டங்கள்,

### 1) பதிநான்காவது மத்திய நிதிக்குழு திட்டம்,

பதிநான்காவது மத்தியநிதிக்குழு திட்டத்தின் கீழ் 2019–2020ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்படி ரூ.123.80 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் 7 சாலை பணிகள் முடிக்கப்பட்டு மேற்படி நிதி பயன்படுத்தப்பட்டது.

### 2) செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ரூ. 32.50 இலட்சம் செலவில் 7 பணிகள் செய்து முடிக்கப்பட்டது

### 3) இயற்கை இடர்பாடுகள் நிதி திட்டம்

2019–2020 ஆம் ஆண்டில் மேற்படி திட்டத்தின் கீழ் ரூ 14.40 இலட்சத்தில் மோட்டார் கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

### 4) பொது நிதி திட்டம்

இந்நகராட்சியின் பொது நிதியில் இருந்து நகரின் வார்டுகளில் சுமார் 98.00 இலட்சத்தில் கால்வாய், சிமெண்ட் சாலை , தார் சாலை , மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4) UIDSSMT (Water Supply – Internal Plumbing)

இந்நகராட்சியில் சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டு குடிநீர் இணைப்பு இல்லாத வரி விதிப்புதாரர்களுக்கு குடிநீர் இணைப்பு 2345 எண்ணிக்கையினை தவணை

முறையில் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5) வீடற்ற மக்கள் தங்கும் விடுதி(Nomal Shelter)

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெரு ஓரங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஏதுவாக வீடற்ற மக்கள்_தங்கும் விடுதி கட்டடம் கட்டுதல் பணி ரூ.52.50 இலட்சம் மதிப்பீட்டில் DAY _ NULM திட்டத்தின் கீழ் பணிகள் காமராஜ் நகர் பகுதியில் நடைபெற்று வருகிறது.

## 34. பலன் தரும் பலவகைப்பட்ட வரவுகள்

அ) அறிக்கையாண்டில் வாரச்சந்தை, தினசரி சந்தை வண்டிமேடு மற்றும் ஆடு அறுக்கும் தொட்டி ஆகிய இனங்களின் மூலம் வந்த வரவுகள் விவரம்.

| வ.எண். இனம் | 2019–2020 ல் வரவு | 2020–2021ல் வரவு |
|---|---|---|
| 1. சந்தைகள் (வாரச்சந்தை) | ரூ. 4,10,000 | ரூ 3,53 000 |
| 2. வண்டி மேடு, பேரூந்து நிலையம். | ரூ. 4,04,000 | ரூ 5,45,000 |
| 3. ஆடு அடிக்கும் தொட்டி மற்றும் | ரூ. 34,000 | ரூ 1,21, 000 |
| மாடு அடிக்கும் தொட்டி | ரூ, 2,68,720 | |
| 4. ஐ.டி.எஸ்.எம்.டி திட்ட கடைகள், | ரூ. 1,25,810 | ரூ 1,40,680 |
| 5. ஐ.யு.டி.பி கடைகள், | ரூ. 2,62,760 | ரூ 2,63,760 |
| 6. டுபிட்கோ திட்ட கடைகள் | ரூ. 2,47,845 | ரூ 2,48,685 |
| 7. மர மகசூல் | ரூ. 2,000 | ரூ 3,100 |
| **மொத்தம் –** | **ரூ. 1507290/-** | **ரூ 1675225/-** |

## 36. கட்டிடங்கள் பிரிவு–

| | | |
|---|---|---|
| அ) அனுமதி கோரி பெறப்பட்ட கட்டிட மனுக்கள் | .. | 141 |
| தீர்வு செய்யப்பட்டவை | .. | 141 |
| அனுமதி வழங்கப்பட்டவை | .. | 135 |
| அனுமதி மறுக்கப்பட்டவை | .. | 6 |
| நிலுவை | .. | 14 |
| ஆ) ஆக்கிரமிப்புகள்– | | |
| நிலுவை உள்ள ஆக்கிரமிப்புகள் | .. | – |
| கண்டுபிடிக்கப்பட்டவை | .. | 15 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டவை | .. | 10 |
| உரிமையாணை பெறப்பட்டவை | .. | – |
| நிலுவை | .. | 5 |

## 37. பொது வருவாய்:–

| அ) சொத்துவரி | அரையாண்டு வீதம் | ஆண்டு வாடகை மதிப்பீட்டின்பேரில். |
|---|---|---|
| 1. பொது காரியங்களுக்கு | 10.50 சதவிகிதம் | |
| 2. தண்ணீர் சாக்கடை வரி | 2.00 சதவிகிதம் | |
| 3. கல்வி வரி | 2.50 சதவிகிதம் | 01.10.1998 முதல் |
| 4. நூலக வரி | 1. 25 சதவிகிதம் | |
| **மொத்தம்** | **16.25** சதவிகிதம் | |

## ஆ) கட்டிடத்தோடு சேரா காலிமனை வரி வீதம்:

| சொத்துவரி விதிப்பு | அரையாண்டு வரி வீதம். |
|---|---|
| 1. பொது செயலுக்கான வரி, | 1.2 சதவிகிதம். |
| 2. நீரளிப்பு சாக்கடை வரி, | 1.2 சதவிகிதம். |
| 3. மலம் அகற்றும் வரி , | 1.2 சதவிகிதம். |
| 4. விளக்கு வரி, | 1.5 (01.04.78 முதல்) |
| 5. கல்வி வரி, | 1.5 (01.10.79 முதல் ) |
| | ----- |
| | 6.6 |
| | ----- |

## இ) தொழில் வரி:-

இந்நகராட்சியில் தொழில்வரி அரசினரால் நிர்ணயித்த மொத்த மாத வருமானத்தின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்திரவுக்கிணங்க வசூலிக்கப்படுகிறது.

### 2009-2010 இரண்டாம் அரையாண்டு (1.10.2018 ) முதல் திருத்திய தொழில் வரி விவரம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | ஆறு மாத வருமானம் ரூ.21,000 வரை | | இல்லை |
| 2) | ஆறு மாத வருமானம் ரூ.21,001 முதல் 30,000 வரை | - | ரூ. 150.00 |
| 3) | ஆறு மாத வருமானம் ரூ.30,001 முதல் 45,000 வரை | - | ரூ. 375.00 |
| 4) | ஆறு மாத வருமானம் ரூ.45,001 முதல் 60,000 வரை | - | ரூ. 740.00 |
| 5) | ஆறு மாத வருமானம் ரூ.60,001 முதல் 75,000 வரை | - | ரூ. 1115.00 |
| 6) | ஆறு மாத வருமானம் ரூ.75,001 முதல் அதற்கு மேலும் | - | ரூ.1250.00 |

## ஈ) வண்டி வாகன வரி:-

| | | |
|---|---|---|
| 1. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகள் இயக்கக்கூடிய அல்லது ஸ்பிரிங்கைப் போல் வேலை செய்யும் இதர உபகரணங்களோடு கூடிய நான்கு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.5.00 |
| 2. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிராணிகள் இயக்கக்கூடிய அல்லது ஸ்பிரிங்கைப் போல் வேலை செய்யும் இதர உபகரணங்களோடு கூடிய இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.3.00 |
| 3. மூன்று சக்கர சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.2.00 |
| 4. குழந்தைகள் தள்ளும் வண்டி அல்லது நடைவண்டி அல்லது நடைவண்டி அல்லாத ஸ்பிரிங்குகளோடு கூடிய அல்லது ஸ்பிரிங்குகளைப்போல் வேலை செய்யும் இதர உபகரணங்களோடு கூடியவண்டி ஒவ்வொன்றுக்கும் | | ரூ.3.00 |
| 5. யாணை ஒவ்வொன்றுக்கும், | - | ரூ.6.00 |
| 6. ஒட்டகம் ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.1.00 |
| 7. நாலடி உயரத்திற்கு குறைவான குதிரைஅல்லது கோவேறு கழுதை ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.0.50 |
| 8. எருது ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.0.50 |
| 9. கழுதை ஒவ்வொன்றுக்கும் | - | ரூ.0.50 |

10. நாய் ஒவ்வொன்றுக்கும் – ரூ.0.50

11. பன்றி ஒவ்வொன்றுக்கும் – ரூ.0.50

12. வெள்ளாடு ஒவ்வொன்றுக்கும் – ரூ.0.50

13. எருமை கடா ஒவ்வொன்றுக்கும் – ரூ.0.50

14. வில் அல்லது இரட்டை மாட்டு வண்டி (பார வண்டி) ஒவ்வொன்றுக்கு – ரூ.4.00

15. கை வண்டி ஒவ்வொன்றுக்கும். – ரூ.1.00

16. ஒற்றை மாட்டு வண்டி ஒவ்வொன்றுக்கும் – ரூ.3.00

17. வண்டிகளுக்கும் பிராணிகளுக்கும் எண் கொடுக்கவும் வில்லை கொடுக்கவும் ஒவ்வொன்றுக்கும் – ரூ.0.25

**உ) ஆள் வரி வீதம்:–**

அறிக்கையாண்டில் எல்லா இனங்களின் வரியை இந்நகரில் மொத்த மக்கள் தொகையின் பேரில் ஆள் ஒன்றுக்கு வரி விகிதத்தின் விவரம் வருமாறு:

| | 2019 – 2020 |
|---|---|
| 1. எல்லா இனங்களின் மூலம் ஆள் 1–க்கு | 47.18 |
| 2. சொத்துவரி விதிப்பு சொத்து ஒன்றுக்கு | 873.00 |
| 3. தொழில்வரி ஆள் ஒன்றுக்கு | 18.80 |

**ஊ) கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு:–**

வரி விதிப்பு பெற்ற மொத்த புதிய கட்டிடங்கள் எண்ணிக்கை 200 ஆகும். இது சென்ற ஆண்டு 125 ஆகும்.

எ) கேட்பு வசூல் மற்றும் நிலுவை விவரம்: (2020–2021)

ருபாய் இலட்சத்தில்

| | | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. சொத்துவரி | : | 144.00 | 15.85 | 128.15 |
| 2. தொழில் வரி | : | 44.71 | 0.50 | 44.21 |
| 3. வரியில்லாயினங்கள் | : | 128.71 | 0.03 | 128.69 |
| 4. குடிநீர் கட்டணம் | : | 71.04 | 1.49 | 69.55 |
| 5.குப்பை வரி | : | 48.27 | 5.56 | 42.71 |
| மொத்தம் | : | 436.73 | 23.43 | 413.31 |

அறிக்கையாண்டில் தனி அலுவலர் மற்றும் அலுவலகத்தில் உள்ள அனைத்து பணியாளர்களும் அலுவலர்களும் நல்ல ஒத்துழைப்பு நல்கி நிர்வாகம் செவ்வனே நடைபெற உறுதுணையாக இருந்தனர்.



ஆணையாளர் (பொ),
திருவத்திபுரம் நகராட்சி.

